வசதியுடன்கூடிய கிடங்கு அமைக்கப்படும் என்றால், அது அந்தப் பகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கு வசதியாக இருக்கும். அதனால், நல்ல விலை கிடைக்கவும் வழி இருக்கிறது. அதுகுறித்து துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்திலே எந்த அளவிற்கு காய்கறிகள் உற்பத்தியாகின்றன, காய்கறிகள் மீதமாகி, பாதிப்பு ஏற்படுகிறதா அல்லது விவசாயிகள் எந்த அளவிற்குப் பாதிப்படைகிறார்கள் என்பனவற்றை அறிந்து, தேவையிருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 488, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

488—

கூடுதல் நிதி ஒதுக்கீடு

**8024—திரு. எம். ஆறுமுகம்:*

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை மேம்படுத்த கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

[2013 மே 14

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த பொது சேவை மையங்கள் ஆரம்பித்தல், வைப்புத் தொகை சேகரித்தல், பாதுகாப்பு கதவுகளுடன்கூடிய பாதுகாப்பு அறை வசதி ஏற்படுத்துதல் போன்ற சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் நிதி நிலைமை மேம்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கியின்மூலமாக காசுக் கடனாக ரூ.100 கோடி அனுமதிக்கப்பட்டு, நகைக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு காசுக் கடனுதவி அளித்து வருகின்றன. மேலும், நபார்டு வங்கியின் மறு நிதியுதவி பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் கடன் ஒதுக்கீட்டுத் துறையில் நகைக் கடன் கொடுக்கின்றார்கள். இதனால், நகைக் கடை வைத்திருப்பவர்களிடம் வேளாண்மை செய்ய வியாபாரிகள் கடன் பெறுகிறார்கள். இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கும்போது, கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் பெற்ற வியாபாரிகளும், விவசாயிகளும்தான் பயனடைகிறார்கள். எனவே, உண்மையான விவசாயிகளுக்கு கடன் வழங்க உத்தரவாதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? மாநில நபார்டு வங்கி ஒவ்வோர் ஆண்டும் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, கடன் வழங்கும் அளவை பரிந்துரை செய்கிறது. இதற்கு தொழில்நுட்பப் பரிந்துரை என்று பெயர். குழுவின் பரிந்துரைப்படி, முழுமையாகக் கடன் வழங்குவதில்லை. குறைந்த தொகையே வழங்கப்படுகிறது. இதனால், வேளாண் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே, குழு பரிந்துரைத்த கடன் தொகையை முழுவதுமாக வழங்க வேண்டும். குறிப்பிட்ட பயிர்களுக்கு,

2013 மே 14]

குறிப்பிட்ட இடங்களில், கடன் வழங்கப்படுகிறது. எல்லா பயிர்களுக்கும் அனைத்து இடங்களிலும் கடன் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் கடன், வேளாண் சார்ந்த கடன்களுக்கு இப்பொழுது மாவட்ட வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள்மூலம் ஏற்கெனவே நிதி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வந்த பிறகு, பயிர்க் கடனுக்காக ரூ.3,000 கோடி என நிர்ணயித்தார்கள். ஆனால், 3,280 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு, அதாவது 2012—2013—ல் 4,000 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. 4,062 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டது. வருகிற நிதியாண்டிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் பயிர்க் கடன் 4,500 கோடி ரூபாய் வழங்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். இது வேளாண் துறையைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. நில வள வங்கியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே விவசாயிகளுக்கு மத்திய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் கொடுத்ததன் காரணமாக, விவசாயிகளிடமிருந்து மறு நிதி வசூல் வராததினால், நலிந்து போய்விட்டது. நலிந்த 180 வங்கிகள் தன்னுடைய வாழ்வாதாரத்தை இழந்த சூழ்நிலையில் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகு, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் மூலமாக 100 கோடி ரூபாய், தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து 100 கோடி ரூபாய். ஆக மொத்தம், ரூ.200 கோடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்டு, அதன்மூலம் நகைக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பொழுதுதான் ஒவ்வொரு வாங்கியும் தன்னுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளன. ஏறத்தாழ பார்த்தீர்களென்றால், தற்பொழுது 30 வங்கிகள் தொடர்ந்து இலாபத்திலும், 115 வங்கிகள் நடப்பாண்டில் இலாபத்திலும் இயங்கி

வருகின்றன. 35 வங்கிகள் இப்போது வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கின்றன. நடப்பாண்டில் அவையும் இலாபம் ஈட்டிவிடும். அப்படி வருகின்றபொழுது, அடுத்த ஆண்டிலிருந்து இந்த வங்கியிலிருந்து பயிர்க் கடன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அம்மா அவர்களின் அரசு வந்த பிறகு, இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலமாக மக்களிடத்திலேயிருந்து வைப்பு நிதி திரட்டுவதற்கு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதுபோக, அரசுத் துறைகளின் மூலமாக இன்றைக்கு உபரியாக இருக்கிற நிதியில் வைப்புத் தொகை திரட்டி இந்த வங்கிகளில் போடுவதற்கும் அம்மா அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அறநிலையத் துறையின் மூலமாக ஏறத்தாழ 20 கோடி ரூபாய்க்கு மேல் வைப்பு நிதி திரட்டப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எதிர்காலத்தில் இந்த வங்கிகள் தொடர்ந்து நல்ல சேவை ஆற்றும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் செயல்பட்டு வரும் கூட்டுறவு நகர வங்கியில் போதுமான நிதியாதாரம் இல்லாத காரணத்தினால், நகைக் கடன் போன்றவை கிடைக்க வாய்ப்பில்லாத நிலை உள்ளது. ஏற்கெனவே சொத்துகளின்மீது அடமானம் வைத்து கடன் பெற்றவர்கள், வட்டி, அபராத வட்டி செலுத்த முடியாமல் உள்ளனர். வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தால், அவர்கள் அசலைக் கட்டுவதற்குத் தயாராக உள்ளனர். எனவே, அந்த வங்கியை மேம்படுத்தவும், கடன் வாங்கியிருக்கக்கூடியவர்கள் வீட்டின்மீது அடமானம் வைத்திருக்கக்கூடியவர்களுடைய வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்வதற்கான முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 மே 14]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில வள வங்கியைப் புனரமைக்கும் விஷயமாகக் கேள்வி கேட்டுவிட்டு, நகர வங்கிக்குப் போய்விட்டார். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர வங்கியில் இன்றைக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால், வைப்பு நிதிகள் திரட்டப்பட்டு அதன்மூலமாகத்தான் பொதுமக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பயிர்க் கடனுக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. பயிர்க் கடன் வாங்கியவர்களுடைய அந்தக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இது பயிர் இல்லாத கடன். தொழில் முதலீட்டுக் கடன். தொழில் புரிவதற்காகக் கடன் வாங்கியவர்கள் இலாப நோக்கத்தோடு வாங்குகிறார்கள். இலாப நோக்கத்தோடு வாங்கி, தொழில் செய்கிறார்கள். அப்படி வாங்குபவர்கள் அதில் வருகிற இலாபத்தைக் கட்டுவதற்கு முன்வராமல், தாங்கள் வாங்கிய கடனை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டால், ஒரு பொது நிறுவனம் எப்படி முன்னேற முடியும்? போன அரசுகூட பல வாய்ப்புகள் கொடுத்திருந்தது. கட்டாதவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தும் யாரும் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு, துறைரீதியாக எடுத்துச் சென்று, மீண்டும் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும்போது, அவர்கள் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்தரவாதம் கொடுப்பாரேயானால், நிச்சயமாக எதிர்காலத்திலே அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வள வங்கி சம்பந்தப்பட்ட கேள்விதான். நிலவள வங்கியில் பண்ணைசாரா கடன் பெற்றவர்கள் நலிவடைந்தவர்கள். அவர்களுடைய தொழிலும் நலிவடைந்திருக்கிறது. ஆகவே, அந்த நலிவடைந்த மக்களுடைய வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து அவர்களைக் காப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

[2013 மே 14

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். ஒரு தொழில் செய்வதற்கு கடன் வாங்கும்போது, திட்டம் வகுத்துதான் வாங்குகிறார்கள். ஒருவர் கடன் வாங்கி வண்டி வாங்குவார், டிராக்டர் வாங்குவார், கடை வைத்து வியாபாரம் செய்வதற்கு கடன் வாங்குவார். அதெல்லாம் முதலீடு. இப்படி கடன் வாங்குபவர்களுக்கு என்ன நஷ்டம் வரப் போகிறது? அவர்கள் கடனைக் கட்ட வேண்டும். பொதுத் துறை வங்கிகள் நல்ல நிலையில் இயங்க வேண்டுமானால், அவர்கள் தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும். உறுப்பினர் அவர்களுக்கு, ஏற்கெனவே கடன் வாங்கியவர்களெல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூடுதல் தகவலாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தாங்கள் வாங்கிய தொகையை முறையாக, விகிதாச்சாரபிரகாரம், வங்கிக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி செலுத்திக் கொண்டிருப்பவர்கள் மத்தியிலே, இதுபோன்றவர்கள் கூட்டுறவு வங்கியிலே கடனை வாங்கிக் கொண்டு, கடனைத் திருப்பியே செலுத்தக் கூடாது என்ற நிலையிலே இருப்பவர்கள்தான் கடனைச் செலுத்த மறுக்கிறார்கள். இந்தக் கூட்டுறவு வங்கி எந்த நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ, அதனுடைய அடித்தளமே பாதிக்கப்பட்டுவிடும். எனவேதான், முறையாக இன்றைக்கு பயிர்க் கடன் வாங்கியவர்களுக்கு, இழப்பு இயற்கை பாதிப்பினால் வந்ததா, மழை பொய்த்து, வந்ததா, வெள்ளத்தினால் வந்ததா என்றெல்லாம் பாராமல், அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இலவசமாக ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இரண்டாவது மத்திய காலக் கடனாக மாற்றியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால், நீங்கள் சொல்வது முதலீட்டுக் கடன். முதலீட்டுக் கடனை இரத்து செய்ய வேண்டும், வட்டியை இரத்து செய்ய வேண்டும் என்பது, துறைரீதியாக சரியாக வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.